சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.127/2022

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ம் நாள் வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | வயது | 47 |
| த/பெ | முருகன் | வட்டம் | மேட்டுபாளையம் |
| விலாசம் | சிட்டேபாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

வாதி கதவு எண்.100/D, புங்கம்பாளையம் வடக்கு, மேடுர், இலுப்பநத்தம் என்ற முகவரியில் வசித்து வருகிறார் என்றால் சரி தான். எனது தகப்பனார் கதவு எண். 3/128, பெரிய தோட்டம், சித்தே பாளையம், இரும்பொறையில் வசித்து வருகிறார் என்றால் சரி தான். அவர்கள் இருவரும் அந்த முகவரிகளில் சுமார் எத்தனை ஆண்டுகள் வசித்து வருகிறார்கள் என்றால் 50 வருடங்களாக வசித்து வருகிறார்கள். நான் எப்போது வாதியை போய் பார்ப்பேன் என்றால் நேரம் கிடைக்கும் போது போய் பார்ப்பேன். 2 மாதங்கள், 5 மாதங்கள் அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறை போய் பார்ப்பேன். மற்ற நாட்களில் வாதி என்ன செய்கிறார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அந்த கால கட்டங்களில் வாதி என்னென்ன ஆவணங்களை எடுத்து படித்து பார்த்து இருப்பார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி தான். சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களையும் அவர் படித்து பார்த்து இருப்பாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரி தான். வழக்கு போட்ட விவரத்தை வாதி என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். இந்த விவரங்களை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு உள்ளேன்.

அதை வாதி வழக்கறிஞரிடம் சொல்லி அதில் நானும் கையெழுத்து போட்டு உள்ளேன். நானும், வாதியும் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று இன்னன்ன கால கட்டங்களில் நடந்தது என வழக்கறிஞரிடம் வாதி சொன்னார் என்றால் சரி தான். தாவா சொத்து சம்மந்தப்பட்ட விவரங்களையும், வாதி வழக்கறிஞரிடம் சொல்லி அது தட்டச்சு செய்யப்பட்ட பின்னர் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரி தான். இந்த வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும், வாதி நேரில் வந்து சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் எனது சாட்சியம் செல்லாது என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.